

சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையத்தின் இறுதி கட்ட பணியை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (17.11.2025) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், கோ.பிரகாஷ், எச்.ஆர்.கௌஷிக், மு.இந்துமதி, மகாவிஷ்ணு, பி.கே.மூர்த்தி, டாக்டர் சாந்தகுமாரி, நெடுஞ்செழியன், பாலமுருகன், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



தலைமைச் செயலகத்தில், பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்காக தெரிவு செய்யப்பட்ட 13 நபர்கள் மற்றும் பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை சார்பில் கருணை அடிப்படையில் ஒரு நபருக்கும் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பிறவியிலேயே தொழிலாளர்களாகவும், சம்பளமின்றி "பிராமணனுக்கு

# பணி செய்ய வேண்டும்' என்பதுதான் நவீன தொழிலாளர் கொள்கையா?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, நவ.18-

"நவீன தொழிலாளர் கொள்கை" என்பது, பழம் பெரும் சாஸ்திரங்களை யொட்டி உருவாக்கப்படுவதாக ஒன்றிய அரசு கூறுவது - நாட்டை பழைய பார்ப்பனிய வருணாசிரம திசை நோக்கித் தள்ளப்படுவதாகும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் எச்சரித்து அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

**வன்மையான கண்டனத்திற்குரியதாகும்!**

ஒன்றியத்தில் உள்ள பிரதமர் மோடி தலைமையிலான ஆர்.எஸ்.எஸ்.- பா.ஜ.க. அரசு - தாங்கள் பதவியேற்றபோது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி எடுத்த வாக்குறுதிக்கு எதிர்முரணாக, நாளும் தங்களது 'ஹிந்துத்துவா' கொள்கைகளை அனைவருக்கும் பொதுவான அரசின் நடைமுறை சட்டத் திட்டங்களாக்கி, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும் செயல்பட்டு வருகிறது. இந்த ஒன்றிய அரசையும், அதே கட்சி - கூட்டணியைச் சார்ந்த மாநில (ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.) அரசுகளையும் ஹிந்துராஷ்டிர அரசுகளாகவே கருதி, நடத்தி வருவது மிகவும் வன்மையான கண்டனத்திற்குரியதாகும்.

ஜி.எஸ்.டி. வரி குறைப்பு போன்ற நடவடிக்கைகளுக்குப் பிரதமர், நிதியமைச்சர் போன்றவர்கள் 'தீபாவளிப் பரிசு' என்று கூறி, ஹிந்துத்துவா கொள்கைத் திணிப்புகளைச் செய்கின்றனர்.

'தீபாவளி என்பது ஒரு மதப் பண்டிகை. மற்ற மதக்காரர்களும் மதங்களை ஏற்காதவர்களும்கூட நாட்டில் உள்ள குடிமக்கள் என்கிற போது, ஒரே மதம் (ஹிந்து மதம்), ஒரே மொழி (சமஸ்கிருதம்), ஒரே கலாச்சாரம் (ஆரிய, வேத ஸநாதன கலாச்சாரம்) என்பதைத்தான் 'ஆரிய ஆட்சியாகவே' நடைமுறைப்படுத்தி வருகின்றனர்!

**ஒன்றிய தொழிலாளர் நலத் துறையின் அதிர்ச்சியூட்டக்கூடிய ஆணை!**

இப்போது ஓர் அதிர்ச்சியூட்டக்கூடிய ஆணை - திட்டம் - ஒன்றிய தொழிலாளர் நலத் துறையில் வெளியிடப்பட்டுள்ளது.

"பழைமை ஆவணங்களான மனுஸ்மிருதி, யக்ஞவல்கிய ஸ்மிருதி, நாரத ஸ்மிருதி, சுக்ர நீதி, அர்த்த சாஸ்திரம் ஆகியவை அரசு நீதி குறித்து வலுவாகக் கூறியுள்ளன.

நீதி, நியாயமான ஊதியம், சுரண்டலிலிருந்து தொழிலாளர்களைப் பாதுகாப்பது ஆகியவற்றை உத்தரவாதப்படுத்துவதில், ஆள்வோரின் கடமை என்னவென்பதுபற்றி அவற்றில் கூறப்பட்டுள்ளன.

நவீன தொழிலாளர் சட்டங்கள் உருவாவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, உழைப்பை நிர்வகிக்கும் இத்தகைய கோட்பாடுகள் இந்திய நாகரிகத்தின் உருவாக்கத்தில் வலுவான அடிப்படை அம்சங்கள் உள்ளன.

இந்தியாவின் பாரம்பரிய புரிதல் என்னவெனில், "உழைப்பு என்பது வாழ்வாதாரத் தேவை மட்டுமல்ல; சமூக ஒற்றுமையையும், கூட்டு முன்னேற்றத்தையும் நிலை நிறுத்த உதவும் 'புனிதமான' மற்றும் தார்மீக அம்சமும் கொண்டது" என்று கூறும் இந்த வரைவுக் கொள்கை, இத்தகைய பாரம்பரிய ஆவணங்களிலிருந்து உத்வேகம் பெறுவதாகவும், இத்தகைய கொள்கைகள் முற்றிலும் நவீன தொழிலாளர் கொள்கைகளுடன் இசைந்துள்ளதாகவும் கூறுகின்றது.

**'சூத்திரர்கள்' என்பதற்கு ஏழு வகைப் பிரிவு மனுஸ்மிருதியில்!**

"தார்மீகம்", "புனிதம்" போன்ற வார்த்தைகள் - மனுஸ்மிருதி, அர்த்தசாஸ்திரம் முதலிய வர்ணாஸ்ரம தரும - பிறவி ஜாதி அடிப்படையில் உழைக்கும் வர்க்கமான மக்களைக் "கீழ்ஜாதி" யாக்கி, அவர்களைப் பிறவி "அடிமை வகுப்புகளாக" - டாக்டர் அம்பேத்கர் மொழியில் கூறவேண்டுமானால் *Servile Classes* என்று தாழ்வுபடுத்தி, அதிலிருந்து மீள முடியாதவர்களாக, படிக்கும் உரிமை, திருமண உரிமை, சொத்துரிமை, சுதந்திர வாழ்வுரிமை அற்றவர்களாக்கி வைத்ததோடு, 'சூத்திரர்கள்' என்பதற்கு ஏழு வகைப் பிரிவு என்று மனுஸ்மிருதி சுலோகம் 410, அத்தியாயம் 8 கூறுவது என்ன?

"அரசன் வைசியனை வர்த்தகம் வட்டி வாங்குதல், பயிரிடுதல், பசுவைக் காப்பாற்றல் இவைகளையும், சூத்திரனை துவிஜாதிகளுக்குப் பணிவிடையுஞ் செய்யச் சொல்லவேண்டியது. அப்படிச் செய்யாவிடில் அவர்களைத் தண்டிக்க"

என்று கூறியுள்ளது.

**அசல் மனுதர்மத்தின் மற்ற சுலோகங்கள் இதோ!**

இதுவே அப்படியே, "அர்த்தசாஸ்திரம்" என்ற ஆரிய நூலிலும்!

இந்தக் கொள்கையை நாட்டில் உள்ள தொழிலாளர் வர்க்கம் தனது சட்டத் திட்டங்களாக ஏற்றால் என்ன நிலை ஏற்படும்?

சுலோகம் 413, அத்தியாயம் 8

"பிராமணன் சம்பளங் கொடுத்தேனும் கொடாமலேனும் சூத்திரனிடத்தில் வேலை வாங்கலாம். ஏனெனில், அவன் பிராமணன் வேலைக்காகவே பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான் அல்லவா!"

சுலோகம் 414, அத்தியாயம் 8

"சூத்திரன் யஜமானனால், வேலையினின்று நீக்கப்பட்டிருந்தாலும், அந்த வேலையானது அவனை விட்டு நீங்காது. இம்மைக்கும், மறுமைக்கும் உபயோகமாக அவனுடன் பிறந்த அந்த வேலையை எவன் தான் நீக்குவன். ஆதலால், அவன் மறுமைக்காகவும், பிராமண சிசுருஷை செய்ய வேண்டியது."

சுலோகம் 415, அத்தியாயம் 8

"யுத்தத்தில் ஜெயித்துக் கொண்டு வரப்பட்டவன், பக்தியினால் வேலை செய்கிறவன், தன்னுடைய தேவடியாள் மகன், விலைக்கு வாங்கப்பட்டவன், ஒருவனால் கொடுக்கப்பட்டவன், குல வழியாக தொன்று தொட்டு வேலை செய்கிறவன், குற்றத்திற்காக வேலை செய்கிறவன், என தொழிலாளிகள் எழுவகைப்படுவர்."

சுலோகம் 416, அத்தியாயம் 8

"மனையாள், பிள்ளை, வேலைக்காரன் இவர்களுக்குப் பொருளில் சுவாதீநமில்லை. இவர்கள் எப்பொருளைச் சம்பாதித்தாலும் அவைகள் அவர்களின் எஜமாநனையே சாரும். அதாவது யஜமான் உத்தரவின்றி தரும விஷயத்திற்கும் தங்கள் பொருளை செலவழிக்கக் கூடாதென்று கருத்து."

சுலோகம் 417, அத்தியாயம் 8

"பிராமணன் சந்தேகமின்றி மேற்சொன்ன எழுவித தொழிலாளியான சூத்திரரிடத்தினின்று பொருளை வலிமையாலும் எடுத்துக் கொள்ளலாம். யஜமானனெடுத்துக் கொள்ளத் தக்க பொருளையுடைய அந்தச் சூத்திரர் தன் பொருளுக்குக் கொஞ்சமுஞ் சொந்தக்காரரல்ல."

இதுதான் இனி ஒன்றிய அரசின் தொழிலாளர் துறை கொள்கையாக அமையப் போகிறதா? (இதுபற்றி நேற்று (16.11.2025) மார்க்சிஸ்ட் நாளேடான 'தீக்கதிர்' ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளது வரவேற்கத்தக்கது).

நாடு பழைய பார்ப்பனீய வருணாசிரம திசை நோக்கி தள்ளப்படுகிறதா?

இதனை முளையிலேயே கிள்ளி எறிய முன்வரவேண்டும்.

நாடெங்கும் அனைவரும் தக்க விழிப்புணர்வுடன் இருந்து, தமிழ்நாடு அரசும், அதன் தொழிலாளர் அமைப்புகளும் கடுமையாக எதிர்க்க முன்வருவது அவசர, அவசியமாகும்!

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட

# 13 நபர்களுக்கான பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் மனோ தங்கராஜ் வழங்கினார்!

சென்னை, நவ.18-

தலைமைச் செயலகத்தில், நேற்று (17.11.2025) பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்காக தெரிவு செய்யப்பட்ட 13 நபர்களுக்கும், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை சார்பில் கருணை அடிப்படையில் ஒரு நபருக்கும் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் காலியாகவுள்ள பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக துணை மேலாளர் (தர உறுதி) பணியிடத்திற்கு ஒரு நபர், விரிவாக்க அலுவலர் நிலைII பணியிடத்திற்கு 06 நபர்கள், தொழில்நுட்பர் (இயக்குபவர்) பணியிடத்திற்கு 05 நபர்கள், தொழில்நுட்பர் (ஆட்டோ மெக்கானிக்) பணியிடத்திற்கு ஒரு நபருக்கும், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை சார்பில் கருணை அடிப்படையில் ஒரு நபர் என மொத்தம் 14 பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பால் வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் நேற்றைய தினம் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைச் செயலாளர் மருத்துவர் ந.சுப்பையன், பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அ.ஜான் லூயிஸ், பால்வளத்துறை இணை மேலாண்மை இயக்குநர் திருமதி ச.கவிதா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முருகப்பா குழுமத்தின் முன்னாள் தலைவர் - கோரமண்டல் இன்டர்நேஷனலின் மதிப்புறு தலைவர்

# அருணாசலம் வெள்ளையன் மறைவு - தமிழ்நாட்டின் தொழில் துறைக்கு இழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் !

**சென்னை, நவ.18–**

**முருகப்பா குழுமத்தின் முன்னாள் தலைவரும் – கோரமண்டல் இன்டர்நேஷனல்–இன் மதிப்புறு தலைவருமான அருணாசலம் வெள்ளையன் அவர்கள் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:–**



பாரம்பரியமிக்க முருகப்பா குழுமத்தின் முன்னாள் தலைவரும் – கோரமண்டல் இன்டர்நேஷனலின் மதிப்புறு தலைவருமான அருணாசலம் வெள்ளையன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

முருகப்பா குழுமத்தின் நிறுவனங்களிலும், தொழிற்கூட்டமைப்புகளிலும் பல்வேறு உயர் பொறுப்புகளில் சிறப்பாகப் பங்காற்றிய அவரது மறைவு தமிழ்நாட்டின் தொழில்துறைக்கு ஏற்பட்ட இழப்பாகும்.

அன்னாரை இழந்து தவிக்கும் துணைவியார் திருமதி. லலிதா அவர்களுக்கும் மற்றும் அவர்தம் குடும்பத்தாருக்கும், தொழில்துறையைச் சேர்ந்த நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### 2024 - 2025 ஆம் ஆண்டுக்கான

# 'கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகள்!

## விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!

சென்னை, நவ. 18

"கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர்" விருதுக்கு 2024 மற்றும்

2025ஆம் ஆண்டுகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இவ்விருதிற்கு தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளர்கள் விண்ணப்பிக்கலாம்.

தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் "கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர்" விருது 2022ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. "கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர்" விருதுக்கு தேர்வு செய்யப்படும் விருதாளருக்கு ரூ.10,00,000/ (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) பரிசுத் தொகையுடன், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். விருதிற்கான தகுதிகள் பின்வருமாறு:

"நடிகர், நடிகையர், இயக்குநர், தயாரிப்பாளர், கதாசிரியர், வசனகர்த்தா, இசையமைப்பாளர், பாடலாசிரியர், பின்னணிப் பாடகர் மற்றும் பாடகி, ஒளிப்பதிவாளர், படத்தொகுப்பாளர், கலை இயக்குநர், ஒலிப்பதிவாளர், சண்டைப்பயிற்சியாளர், நடன ஆசிரியர், ஒப்பனைக் கலைஞர் மற்றும் தையற் கலைஞர் என தமிழ்த் திரைப்பட உலகிற்கு மிகச்சிறந்த பங்களிப்பை ஆற்றிய வாழ்நாள் சாதனையாளர்கள் விண்ணப்பிக்க தகுதி வாய்ந்தவராகக் கருதப்படுவர்."

இவ்விருதிற்குரிய விண்ணப்பப் படிவத்தினை செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வலைதளத்தில் (www.dipr.tn.gov.in) இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ண ப்பங்களை விரிவான விவரங்கள் மற்றும் அவற்றுக்குரிய ஆவணங்களுடன் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை/ உறுப்பினர்செயலாளர், திரைப்படத் துறையினர் நலவாரியம் முதல் தளம், மாநில செய்தி நிலையம், கலைவாணர் அரங்க வளாகம், வாலாஜா சாலை,

சென்னை600002 என்ற முகவரிக்கு 28.11.2025 அன்று மாலை 5.00 மணிக்குள் அனுப்பிட வேண்டுகிறோம்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி 36 வது வார்டு ராகவா நகரில் ரூபாய் 35 லட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடிமையம் கட்டிடம் கட்டும் பணிகளையும் 23 வது வார்டு சூர்யா அவென்யூ பகுதியில் 25 லட்சம் மதிப்பீட்டில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிகளையும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி அடிக்கல் நாட்டி துவக்கி வைத்து தரமாகவும் விரைந்து பணிகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார் அப்பொழுது மாமன்ற உறுப்பினர்கள் சரஸ்வதி சந்திரசேகர் என். ஆண்டாள்கண்ணன் மாநகராட்சி உதவி பொறியாளர்கள் கழக நிர்வாகிகள் நலவாழ்வு சங்க நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்

### வேளச்சேரி-பரங்கிமலை இடையிலான

# பறக்கும் ரயில் சேவை வரும் ஜனவரி முதல் தொடங்கும்!

## ரயில்வே துறை உறுதி!

சென்னை,நவ.18-

வேளச்சேரி-பரங்கிமலை இடையிலான பறக்கும் ரயில் சேவை வரும் ஜனவரி முதல் தொடங்க உள்ளதாக ரயில்வே அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை கடற்கரை - வேளச்சேரி மேம்பால பாதையில், தினமும் 100 சர்வீஸ் மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன. வேளச்சேரி - பரங்கிமலை 5 கி.மீ., துாரம் இணைக்கும் வகையில், மேம்பால ரயில் பாதை திட்டப்பணி, 2008ம் ஆண்டில் துவங்கப்பட்டது. ஆனால், ஆதம்பாக்கம், தில்லை கங்கா நகரில் நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட பிரச்னையால் பணிகள் முடங்கின.ஒரு வழியாக இந்த பிரச்னைக்கு தீர்வு காணப்பட்டு, இந்த தடத்தில் 2022ம் ஆண்டுக்கு பின் மீண்டும் பணிகள் நடந்தன.

கடந்த 17 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்த வந்த மேம்பால ரயில் இணைப்பு பணி முடிவுக்கு வந்தது. இதற்கிடையே, வேளச்சேரியில் இருந்து பரங்கிமலைக்கு, 10 பெட்டிகளுடன் சரக்கு ரயில் இயக்கி சோதனை நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, ரயில்வே பாதுகாப்பு ஆணையர் தலைமையிலான கட்டாய சோதனை ஓட்டமும் தொழில்நுட்ப ஆய்வும் டிசம்பர் மாதத்தில் நடைபெறும். சோதனை ஓட்டம் வெற்றிகரமாக முடிந்தவுடன்,

ஜனவரியி லேயே ரயில் சேவை அதி காரப்பூர்வமாக தொடங்க ப்படும் என்று ரயில்வே துறை உறுதிப்படுத்தி யுள்ளது. இந்த ரயில் சேவை தொடங்கினால், வேளச்சேரி, ஆதம்பாக்கம், தில்லை நகர, கங்காநதர் பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் தினமும் பயன்பெற உள்ளனர்.




கேரள மாநில தி.மு.க. சார்பில் வர இருக்கும் கேரள மாநில உள்ளாட்சித் தேர்தலில் புனலூர் தொகுதியில் உள்ள புனலூர் நகராட்சித் தேர்தலில் 9 வார்டுகளில் உள்ள வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் மற்றும் தேர்தல் அலுவலகம் திறப்பு விழா நேற்று நடைபெற்றது . இந்த நிகழ்ச்சிக்கு கொல்லம் மாவட்டக் கழக செயலாளர் ரெஜிராஜ் தலைமை வகித்தார். கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் கழக கொடியேற்றிதேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்தார். உடன் திருவனந்தபுரம் மாவட்டக் கழக செயலாளர் அனீஷ், சுரேஷ், புவனேஷ், ராமர், சதாசிவம் ஆசாரி, ரினுராஜன், ஹரி குமார் மற்றும் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடும் 9 நகராட்சி வேட்பாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.